# Madurai Kamaraj University

Palkalai Nagar, Madurai

# Sri Sathguru Sangeetha Vidyalayam

College of Music and Research Centre, Madurai

## Ph. D. Public Viva - Voce Examination

NOTIFICATION

| | |
|---|---|
| Name of the Candidate | **K. Selvajayanthi** .M.Music., M.Phil.,<br>Reg No: P 3716 |
| Title of the Thesis | **இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு** |
| External Examiner | **Dr. P. Natarajan**.,M.F.A., M.Phil., Ph.D<br>Principal,<br>Kalaikaviri College of Fine Arts,<br>18, Benewells Road,<br>Thiruchirappalli |
| Guide | **Dr.N.Barathi**.M.A., Ph.D<br>Principal i/c,<br>Sri Sathguru Sangeetha Vidyalayam College of Music and Research Centre, Madurai |
| Venue | **Sivasamban Hall**<br>Sri Sathguru Sangeetha Vidyalayam College of Music and Research Centre, 15-A Gokhale Road, Tallakum, Madurai - 2 |
| Date and Time | 02 AUG 2022 Tuesday at 11:00 AM |

**I HEREBY CORDIALLY INVITE ONE AND ALL FOR THE OCCASION OF PUBLIC VIVA-VOCE EXAMINATION, TO ENCOURAGE AND ENLIGHTEN THE RESEARCHER. A COPY OF THE THESIS IS AVAILABLE IN THE LIBRARY OF THE RESEARCH CENTRE, SRI SATHGURU SANGEETHA VIDYALAYAM COLLEGE OF MUSIC AND RESEARCH CENTRE, MADURAI -2, FOR REFERENCE.**

**Dr. N.Barathi**.M.A., Ph.D
Guide & Principal i/c

ஆய்வுச்சுருக்கம்

# இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு

## ஆய்வு முன்னுரை

கலாசாரத்திற்கும் பண்பாட்டிற்கும் உலகத்திற்கே மிகப் பெரிய உதாரணமாக திகழும் இந்த பாரதத் திருநாட்டில் இசை என்பது கலாசாரத்தோடு இணைந்து பல பரிணாம வளர்ச்சியையும் மாற்றத்தையும் கண்டுள்ளது. இசைக்கும் கலாசாரத்திற்கும் தொடர்பு உள்ளது போல் இசைக்கும் சமயத்திற்கும் நெடுங்காலமாக மிகப் பெரிய தொடர்பு இருந்து வருகிறது. அந்த வகையில் சைவ சமயத்தையும் கர்நாடக இசையில் தமிழ், சம்ஸ்க்ருதம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சிவபெருமான் மீது இயற்றப்பட்ட இசைப்பாடல்களில் உள்ள பிரபலமான இசைப்பாடல்களால் ஏற்பட்ட இசை வளர்ச்சியையும் இவ்வாய்வின் மூலம் வெளிக் கொணர முயற்சி செய்யப்பட்டுள்ளது.

மனிதன் கடவுளை அறிவதற்கான ஓர் பாதை தான் மதம். இந்த பாதை மனிதனை அறத்தின் வழி நடந்து முன்னேறுவதற்கான பாதையாக அமைகின்றது. இவ்வாறு இந்த வழியில் வாழ்ந்து காட்டியவர்களை இறைவன், மகான், யோகி என்று அழைக்கின்றோம். இந்த மதத்தின் கோட்பாடு ஆரம்பத்தில் இறைவன் ஒருவனே என்று தான் முன்மொழிந்தது, பொதுவாக மதம் என்பதும் சமயம் என்பதும் ஒன்று தான். ஒவ்வொரு மதத்திலும் இசை என்பது அவசியமான ஒன்றாக உள்ளது. இந்த இசை, பக்தியை இறைவனிடம் கொண்டு செல்வதற்கும், பக்தர்கள் வழிபாடு செய்வதற்கும் ஓர் பாலமாக அமைந்துள்ளது. சைவ சமயத்தின் மூலம் இசை எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை அறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வின் நோக்கம்

நம் நாட்டில் சைவ சமயத்தோடு தொடர்புடைய பாடல்களின் இசையின் அமைப்பு, வடிவங்கள் மற்றும் காலப்போக்கில் அவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் புதிதாக தோன்றிய இசைவடிவங்கள் மற்றும் இராகங்கள் மூலம் ஏற்பட்ட இசையின் வளர்ச்சியை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு எல்லை

"சைவம்" என்ற சொல் சிவபெருமானையும் அவரை சார்ந்த சக்தி, கணபதி, முருகன் ஆகிய கடவுளரைக் குறித்தாலும், இந்த ஆய்விற்கு சிவபெருமானை மட்டுமே எடுத்துக்கொள்ளப்படுகிறது. "இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு" என்ற இந்த தலைப்பில் தென்னகத்தில் எழுந்தருளிய சிவபெருமான் மீது இயற்றப்பட்ட தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், கீர்த்தனைகள் மற்றும் பிற இசைவடிவங்களில் சிவபெருமானை துதித்துப் பாடப்பட்ட பிரபலமான பாடல்கள் மட்டுமே இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

சைவ சமயத்தொடு தொடர்புடைய இசை பாடல்கள் கீதம், ஸ்வரஜதி, வர்ணம், கீர்த்தனை, பதம், தில்லானா போன்றவறைக் கொண்டு பகுப்பாய்வு முறையிலும் சிதம்பரம், சீர்காழி, மதுரை, சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர், காளஹஸ்தி ஆகிய தலங்களுக்கு சென்று கள ஆய்வு முறையிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

## ஆய்வின் கருதுகோள்

இசை வளர்ச்சியில் பிற சமய இலக்கியங்களை விட சைவ வைணவ சமய இலக்கியங்கள் தமிழ் மொழியில் தனித்துவமாக உள்ளன. எனவே

தேவார காலகட்டதிலிருந்து இன்றுவரை சிவபெருமான் மீது இயற்றப்பட்ட பாடல்களின் காணப்படும் இசைவடிவங்கள் மற்றும் ராகங்கள் ஆகியவற்றால் ஏற்பட்ட வளர்ச்சியை பற்றி கூறுவது கருதுகோளாகிறது.

**ஆய்வுச் சிக்கல்**

"இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு" என்று குறிப்பிட்டதால் எல்லாவற்றையும் குறிப்பிட இயலாமல் ஆய்வுச்சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே காலத்தின் நிலை கருதி சில இயலிசைப் புலவர்களின் முக்கியமான பங்களிப்பு மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் பயன்**

இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு என்ற இவ்வாய்வின் இறுதியில் தேவாரகாலத்தில் வழங்கி வந்த 23 பண்கள் தவிர பிற இசைவடிவங்களில் காணப்பட்ட எண்ணற்ற ராகங்களும், இசைக்கச்சேரிகளுக்கும், நாட்டியத்திற்கும் பயன்படும் வகையில் இருந்தமை அறியப்பட்டுள்ளது. மேலும் திருத் தலங்கள், இயலிசைப் புலவர்கள், மடங்கள், ஆதீனங்கள் வளர்த்த இசை முறைகள் பற்றி முழுமையாக இசைக் கலையினைக் கற்கும் மாணவர்கள் மற்றும் தமிழக இசை ரசிகர்கள் அறிந்து மிகவும் பயன்பெறும் வகையில் ஆய்வு பயன் விளைந்துள்ளது இவ்வாய்வு. மேலும் சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய தென்னிந்திய மொழிகளில் உள்ள சைவ சமய பாடல்களுக்கு முக்கியத்துவம் தந்து அவற்றின் முக்கியத்துவத்தை பகுத்து ஆய்வு செய்வதற்கு தூண்டுதலாகவும் அமைந்துள்ளது.

**ஆய்வு முன்னோடிகள்**

"இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு" என்ற ஆய்விற்கு முன்னோடிகளாக விளங்குபவை

1. ஓதுவார்கள் - ஓர் ஆய்வு - சென்னைப் பல்கலைகழகம்
2. பாபநாசம் சிவன் இயற்றிய சிவஷேத்திர கீர்த்தனைகள் - மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. ஓதுவா மூர்த்திகள் வளர்த்த பண்ணிசை மரபு - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**அ) முதன்மை ஆதாரங்கள்**

1. தமிழர் இசை - ஏ.என். பெருமாள்
2. தமிழ் இசை இலக்கிய வரலாறு
3. தமிழிசைப் பாடல்கள் (தொகுதி)
4. தென்னக இசையியல் - பி. டி. செல்லத்துரை
5. சீர்காழி மூவர்
6. கருணாமிர்த சாகரம்
7. ஸ்ரீ ஆதிசங்கரரின் பாமாலை மலர்
8. ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர்
9. காரைக்கால் அம்மையார்
10. பெரியபுராணம்
11. பட்டினத்தடிகள்
12. தாயுமானவர்
13. கீர்த்தனரத்னாகரம்

போன்ற நூல்களும் பிற நூல்களும் பயன்படுத்தப்பட்டன.

**ஆ) துணைமை ஆதாரங்கள்**

- தமிழ் விக்கிப்பீடியா தகவல் (https://g.co/kgs/7U7HF6)
- களஞ்சியம் கூகுள் விக்கிபீடியா வழித் தகவல்கள்
- கூகுள் தினமலர் Temples.com

- Guruguha.com
- Karnatik.com

இதனடிப்படையில் “இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு” என்ற ஆய்வு ஆராயப்பட்டுள்ளது.

**ஆய்வேட்டின் கட்டமைப்பு**

“இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு” என்று ஆய்வானது முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப் பட்டுள்ளது.

இயல் 1: சமயங்கள்

இயல் 2: இலக்கியங்களில் இசை

இயல் 3: இசை வடிவங்கள்

இயல் 4: சைவ மடங்களும் பிற நிறுவனங்களும் வளர்த்த இசை

**இயல் - 1**

“இசை வளர்ச்சியில் சைவ சமயத்தின் பங்கு - ஓர் ஆய்வு” என்ற ஆய்வேட்டில் முதலாவது இயலில் சமயங்கள் என்ற தலைப்பில் பாரதமும் சமயங்களும், ஆதி சங்கரர் வளர்த்த ஷட்மார்க்கம், சைவசமயத்தின் சிறப்பு பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. சைவத்தின் பெருமை, 64 சிவாலயங்கள், பஞ்சபூதஸ்தலங்கள், பஞ்சசபை, அட்டவீரட்டானக் கோயில்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**இயல் - 2**

இலக்கியங்களில் இசை என்ற இரண்டாவது இயலில் காப்பியங்களில் சைவ வழிபாடு, தேவாரப் பதிகங்களில் காணப்படும் பண்கள் பதிகங்கள் பற்றியும் பெரியபுராணத்தில் காணப்படும் இசைக்குறிப்புகள் மற்றும் 63 நாயன்மார்கள் பற்றியும் திருமுறைகள்

பாடியவர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பண்கள் அதற்கான ராகங்கள் பதிகங்கள் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. காரைக்கால் அம்மையாரின் சிவவழிபாடு பற்றியும் 18 சித்தர்கள் அருளிய சிவதத்துவங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சிற்றிலக்கியங்களில் இசைவடிவங்கள் மற்றும் இசை அமைப்பு அந்த இலக்கியத்தோடு பதிகப் பாடல்களில் காணப்படுவதையும் அருளார்களின் படைப்புகளில் தாயுமானவர், இராமலிங்க அடிகளார் அவர்களின் பாடல்களில் சிவபெருமானை போற்றிய விதம் அறியப்படுகிறது.

**இயல் - 3**

"இசை வடிவங்கள்" என்ற தலைப்பில் சிவன் மீது இயற்றப்பட்ட பாடல்களின் இசை வளர்ச்சி அறியப்படுகிறது. பயிற்சி இசைவடிவங்ளான கீதம், ஸ்வரஜதி, வர்ணம், தான வர்ணம், பத வர்ணம், அரங்கிசை வடிவங்களான கீர்த்தனைகள், இராகமாலிகை, பதம், தில்லானாவில் காணப்படும் சிவபெருமான் மீது இயற்றப்பட்ட உருப்படிகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. பல வகையான உருப்படிகளை இசை உலகிற்கு இயற்றிய இசைப்புலவர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பாடல்கள் இராகங்கள் தாளம் மற்றும் பாடல்களை இயற்றியவர்கள் பற்றிய அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

**இயல் - 4**

"சைவ மடங்களும் பிற நிறுவனங்களும் வளர்த்த இசை" என்ற தலைப்பில் மன்னர்கள் மற்றும் சைவ மடங்களின் பங்களிப்பு பற்றியும், ஓதுவார்கள் பிற நிறுவனங்கள் ஆற்றிய தொண்டு பற்றியும் விளக்கமாக கூறப்படுள்ளது. இறைவன் பெயர் கொண்ட மடங்களில் பாடத்திட்டங்கள், மடத்து ஆட்சி குழுவினர், ஆதினங்கள் மடங்கள் மூலம் இசையின் வளர்ச்சி, சைவ ஆலயங்கள் இசையைப் பாதுகாத்தமை, கோயில்களில் ஓதுவார்களை கொண்டு தேவாரம் பாடும் முறை, தமிழிசைச் சங்கம்

நடத்திய பண் ஆராய்ச்சிக் கூட்டம், இசைக்கு முக்கியத்துவம் கொடுத்த அண்ணாமலை பல்கலைக்கழக இசைத் துறை பிற இசைக்கல்லூரிகள் இவற்றின் பங்களிப்பு இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

இயல்கள் தோறும் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அடிப்படையில் இயல் முடிவுகள் தொகுத்து தரப்பட்டுள்ளது. இம்முடிவுரையின் அடிப்படையில் நிறைவுப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

ஆய்வேட்டின் இறுதிப்பகுதியில், இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்ட அடிப்படை நூல்கள் மற்றும் துணைமை நூல்கள், ஆய்வேடுகள் முதலானவற்றின் விளக்கப்பட்டியல் தரப்பெற்றுள்ளன.

**பின்னிணைப்புகள்**

1. அட்டவணைகள்
2. குறுந்தகடு